# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2304/48 - 2022 නොවැම්බර් මස 03 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.11.03

2304/48 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

தொடர்பு இல.: ME/ACQ/F 824.
காணி அமைச்சின் தொடர்பு இல.: 4-3/8/2016/PC/468.

கொழும்பு மாநகர சபைக்கு சொந்தமான கிழக்கு - பாமங்கட பிரிவில் அமைந்துள்ள விஜித வீதியை அகலமாக்கி அபிவிருத்தி செய்வதற்காக கீழே விவரிக் கப்பட்டுள்ள காணித்துண்டுகள் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டுள்ளதாக, 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணத்தின், கொழும்பு மாவட்டத்தின், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவில், கொழும்பு மாநகர சபை அதிகார எல்லைக்குள் அமைந் துள்ள கிழக்கு - பாமங்கட பிரிவில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2022.04.09 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்டுள்ள இல. கொ. 9986 கொண்ட ஆரம்ப திட்டவரைபடத்தில் இல. 1 - 5 எனத் தயாரிக்கப்பட்டுள்ள 0.0176 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழே விவரிக்கப்பட்டுள்ள காணித் துண்டுகள் 5 இன் விபரங்கள்:

**01. துண்டு இல. 01**
காணியின் பெயர்: வரிப்பண இல. 776, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை; விபரம்: வீட்டுத் தோட்டம்; உரிமை கோருபவர்: அடையாளம் காண முடியாது; விஸ்தீரணம்: 3.8 பேர்ச்.

**02. துண்டு இல. 02**
காணியின் பெயர்: - ; விபரம்: பாதை; உரிமை கோருபவர்: அடையாளம் காண முடியாது; விஸ்தீரணம்: 0.4 பேர்ச்.

**03. துண்டு இல. 03**
காணியின் பெயர்: வரிப்பண இல. 13/4, விஜித வீதி; விபரம்: வீட்டுத்தோட்டம்; உரிமை கோருபவர்: ரோஹிணி மேரி வர்ஜினிய டி சில்வா (மரணித் துள்ளார்), 13/14, விஜித வீதி, பாமங்கட; விஸ்தீரணம்: 1.0 பேர்ச்.



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**04. துண்டு இல. 04**

காணியின் பெயர்: வரிப்பண இல. 748, ஸ்ரீ சம்புத்தத்துவ ஜயந்தி மாவத்தை; விபரம்: வீட்டுத் தோட்டம்; ஆரம்ப உரிமை கோருபவர்: காமிணி விக்கிரமசிங்க, இல. 748, ஹெவலொக் வீதி, பாமங்கட; விஸ்தீரணம்: 0.6 பேர்ச்.

**05. துண்டு இல. 05**

காணியின் பெயர்: வரிப்பண இல. 127, வேலு வனாராம வீதி; விபரம்: வீட்டுத்தோட்டம்; ஆரம்ப உரிமை கோருபவர்: கிரிஷ்ணபிள்ளை மயில்வாகனம், 127, வேலுவனாராம வீதி, பாமங்கட; விஸ்தீரணம்: 1.2 பேர்ச்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022.10.21 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரின் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022.10.14 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அவர்களின் உரிமை சம்பந்தமான அனைத்து உறுதிகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் பரிசோதனையின் போது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(திருமதி) ஜே.எம். பத்ரானி ஜயவர்தன,
மாநகர ஆணையாளர்,
கொழும்பு மாநகர சபை மற்றும்
கொழும்பு மாநகர சபை
அதிகார எல்லைக்குள்
காணிகள் எடுக்கும் அலுவலர்.

மாநகர ஆணையாளர் அலுவலகம்,
நகர மண்டபம்,
கொழும்பு 07,
2022, செத்தெம்பர் 06.

EOG 11 - 0051